முருகப்பெருமான் துணை

**மகான் தருமராஜன் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.09.2022**, திங்கட்கிழமை

1. அன்னதான சேவை ஆற்றும்
ஆறுமுக அரங்கமகா ஞானியே
மன்னவனாக கலியுகம் தன்னில்
மாதருமம் புரிகின்ற தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஆழ்வார்களை தொடர்ந்து
ஆசிதந்து பஞ்ச பாண்டவர்களுள்
அறிவிப்பேன் தருமராஜன் யானும்
3. யானும் சுபகிருது யாளி திங்கள்
உயர்வான இருபான்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 20 நாள், 05.09.2022 திங்கட்கிழமை)
ஞானம்பட அருளாசி தன்னை
நாட்டிடுவேன் உலகம் தருமபலம்பெற
4. பலம்தரும் சன்மார்க்க வழியோடு
பசிபிணி விரட்டும் பிரணவக்குடிலை
வலம் வந்து அரங்கன் தருமத்தை
வழிமொழிந்து உலகோர் செய்துவர
5. வருகவே மக்களிடை உறுதிபட
வளரும் தரும சிந்தை தயவு
வறுமை பிணி இடர் விலகி
வளமான மகிழ்வானச் சூழலாக
6. ஆகவே மாறி இனிதே மாற்றம்
அரங்கமகான் தேற்றமாகக் கண்டு
செகத்தோர் தருமவான்கள் ஆவர்
சேவைதனை மிகுதி செய்து
7. செய்துமே ஞானிகளை வணங்கும்
சிறப்பறிவு தெளிவும் கூடி
அய்யமற மகான்கள் ஆசிபட
அனைவரும் உலகை மாற்றும்
8. மாற்றும் ஞானிகள் ஆகியே
மண்ணுலகில் தரும ஞான ஆட்சி
ஆற்றல்பட துவக்கம் ஆகியே
அகிலம் அமைதி பாதுகாப்பை பெறும்
9. காப்புதரும் மகா சக்தியாக வந்த
கருணைமிக்க அரங்கமகான் அவதாரம்
ஒப்புகொண்ட மக்கள் வாழ்வில்
ஓங்காரன் ஆசிபலம் துணையாகி

10. ஆகியே அவரவர் விருப்பம் வழி
அனைத்தும் வெற்றி ஆகியே
மகிழவே நற்குடி தனதேட்டுடன்
மக்கட் செல்வம் நற்பேருவளம்

11. வளங்கள் பலவகையும் கூடி
வாழும் காலமே சர்வ சித்தியும்
பலங்கள் ஆகி அரங்கன்தேடும்
பரோபகாரமிக்க ஞானிகள் ஆவர்
அருளாசி முற்றே

–சுபம்–